தென்னகத்

தலைவன்

ஆசிரியர் : தினகரன்



முறுவலிக்கும் இளவல்

'முரசொலி'க்கும் மாறன்

விலை 16 காசு

தலைவன்

25-11-62

சீசரை புருட்டஸ் கொல்ல வந்தபோது...

மதியழகன்
தரும் வரலாற்று விளக்கம்

நெருங்கிய நண்பனை “ஏய் புருட்டஸ் நீயுமா” என்றான்.

போர் தொடுத்த சீனா புருட்டஸ். சீசர் நிலையில் இந்தியா.

நானும், நாவலரும் 113 நாட்கள் சிறையிலே பூட்டப்பட்டிருந்தபோது பல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

கழகத்தின் கட்டளை ஏற்று கடந்த ஜுலை மாதம் 19-ந் தேதி விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராடிச் சிறை சென்றேன்.

சிறைச்சாலை பூங்குயில் கூவிடும் சோலையல்ல என்பது நீங்கள் அறிந்ததே. அங்கே சிரமம் இருந்தது. கஷ்டம் இருந்தது. இடைஞ்சல்கள் பல இருந்தன. சென்னையிலே உள்ள சிறையிலே பயங்கர மிருக தர்பார் நடந்தது. மனித உருவிலே நடமாடும் மிருகங்களின் பயங்கர வெறிச் செயல்கள் நடைபெற்றன.

நாங்கள் சிறை செல்லும்போது நண்பர் கோ. சு. மணி எங்களுடன் வந்தார். நாங்கள் 5 பேர்களாக உள்ளே போனோம். எனது குழு நாவலரின் தலைமையிலே மறியல் செய்தது. நானும், முனுசாமியும், கோ. சு. மணியுமாக உள்ளே சென்றோம். திரும்பும்போது எங்களுடன் கோ. சு. மணி வரவில்லை.

எங்களுக்கு முன்னால் கோ. சு. மணியின் பிணத்தைத்தான் இந்த சர்க்காரால் தர முடிந்தது.

இன்றைக்கு ஆயிரம் சமாதானங்கள் சொல்லலாம். சீனப் பிரச்னை மட்டும் இல்லாதிருந்தால் என்ன நடந்திருக்கும்? கோ. சு. மணியினுடைய இதயமே உங்களிடம் பேசட்டும். இவ்வளவு அநீதி, அக்ரமம் நடந்திருக்கிறது.

ஆயிரம் சமாதானங்கள் சொன்னாலும் மணியின் தாயாருக்கு மகனைக் கொடுக்க முடியுமா? தந்தையாருக்குப் பெற்றெடுத்த மகனைத் தர முடியுமா? துணைவியாருக்குக் கணவனைத் தர முடியுமா? மகனுக்கு இறந்த அவனது தந்தையைக் கொடுக்க முடியுமா?

வாக்காளர்களின் கட்டளையைச் சட்ட மன்றத்திலே எடுத்துக்கூறுகிறோம். அதற்கு உரிமை உண்டு. சட்டமன்றத்திலே நாவலர் அவர்கள் விலைவாசியைக் குறைக்க ஒரு கமிட்டி அமைக்கும்படி கேட்டுக்கொண்டார். இதற்கு ஆவன செய்ய முன்வந்தார்களா?

நான்கு மாதங்களுக்குப் பிறகு கோ. சு. மணியைப் பலி கொடுத்ததற்குப் பிறகு பொற்செழியனைச் சாகடித்ததற்குப் பிறகு பதினெட்டாயிரம் கழகக் காளையரை சிறைச் சாலையிலே வாட்டிய

சீசர் புருட்டசைப்பார்த்து-

பிறகு அருமைத் தலைவர் அண்ணா அவர்களை 100 நாட்கள் சிறையிலே பூட்டிய பிறகு சொல்லவொண்ணா வேதனைகளுக்குப் பிறகு — மனைவியை இழந்த மாத்துயரம் ஏற்பட்ட பின் தாயை — தந்தையைப் பறிகொடுத்ததற்குப்பின் விலைவாசிக் குறைப்பு பற்றி அரசாங்கத்தினர் இப்போது யோசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

அன்றே சட்ட மன்றத்தில் நாவலர் சொன்னாரே! பதினெட்டாயிரம் பேரைச் சிறையிலே அடைத்ததற்குப் பிறகு தான் யோசனை வந்ததா?

எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. நாங்கள் சிறை போவதற்கு முன்னால், பிரதம மாகாண மாஜிஸ்டிரேட்டின் எதிரில் வாக்கு மூலம் படிக்கும் போது நான் சொன்னேன் ''எப்படிப்பட்ட தீர்ப்புவேண்டுமானாலும் அளியுங்கள். அதைப் பற்றிக் கவலையில்லை. நான் இப்போதுதான் புதிதாகச் சிறை செல்பவன் அல்ல, 7 முறை சிறை சென்றவன். இப்போதும் நான் சிறை சென்றால் எண்ணிக்கை எட்டாக உயரும்.''

''இன்றையதினம் அருமைத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களை இந்த சர்க்கார் வேலூர்ச் சிறைச் சாலையிலே பூட்டிவைத்திருக்கிறது. என்று அவர் சிறையிலே பூட்டப்பட்டாரோ அன்று முதல் இந்த நாட்டிலே உள்ள சிறைச்சாலைகள் அனைத்தும் யாத்திரைத் திருத்தலங்களாக மாறிவிட்டன'' — என்று நிசப்தம் நிரம்பிய அந்த நீதி மன்றத்திலே சொன்னேன்.

திராவிடம் எமது பிறப்புரிமை எனவும் நான் அழுத்தந்திருத்தமாகக் கூறினேன்.

தீர்ப்பு எதுவாக இருந்தாலும் சரி எதிர்காலமும், மக்களும் எங்கள் பக்கமே என்றேன்.

நானும், நாவலரும், நண்பர்களும் 113 நாட்கள்; இரும்புக் கதவுகளுக்குப் பின்னால் நீண்ட நெடுமதிற் சுவர்களுக்குப் பின்னால் இருந்தோம்.

பேராபத்துச் சூழ்ந்திருக்கிற இந்த நேரத்தில் — தி. மு. கழகம் தனது நேசக் கரத்தை நீட்டியிருப்பதால், கழகத்தின் தன்மை அறிந்து செருக்கும், மமதையும் அழிந்து ஒன்றுபட வேண்டுமென மிகப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் அமைத்திருக்கிற யுத்தக் கமிட்டியில் நாவலர் பங்கு பெற்றுள்ளார். நிபந்தனையற்ற ஒத்துழைப்பைத் தருவதாக உறுதி கூறினோம். கழகப் பாராளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மாதச் சம்பளத்தைத் தருவதாக வாக்களித்துள்ளனர். கழக நிர்வாகக் கமிட்டிகள் தங்களின் தூய்மையான உறுதியைச் சர்க்காருக்கு அளிக்கிறது. இவைகளை எல்லாம் யோசித்து, நமது பெருந் தன்மையை உணர்ந்து இந்த சர்க்கார் நடக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நாவலர் அவர்கள் விலைவாசி உயர்வைக் குறைக்கத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி கூறினார்கள். அப்போது கேட்டிருக்கக் கூடாதா? சிறைபோன பிறகு தானா புத்திவந்தது.?

பக்தவத்சலம் அவர்களும், மற்ற அமைச்சர்களும் ''விலைவாசி எங்கே ஏறியிருக்கிறது?'' என்று இறுமாப்புடன் பேசினார்கள். திட்டக் கமிஷன் இப்போது 40 பக்கங்கள் அடங்கிய திட்டத்தைத் தீட்டியிருக்கிறது.

கொள்ளை இலாபம் அடிப்பவர்களும் பதுக்கல் காரர்களும் சமூக விரோதிகள். அவர்களை வளரவிடக் கூடாது. மத்திய உணவு மந்திரி பாட்டீல் இப்போதுதான் பாங்குகளின் உணவு தானியங்களுக்குக் கடன் கொடுப்பதைத் தடுப்பதுபற்றிப் பரிசீலனை செய்வதாகக் கூறியிருக்கிறார்.

நான்கு மாதங்களுக்கு முன் நாவலர் கூறியதைக் கேட்காதவர்கள் கழகத்தவரைச் சிறையிலே அடைத்துவிட்டு, இவ்வளவு நிலையும் ஏற்பட்டபின், விலைவாசி உயர்வைப் பற்றி அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளதைப் பார்க்க முடிகிறது.

தி. மு. கழகம் தூய்மை நிறைந்த கட்சி நடு நிலையிலிருந்து என்றும் நழுவியது கிடையாது. எல்லையைக்காக்கப் போராடிக் கொண்டிருக்கும் வீரர்களுக்குத் தியாகம் செய்யத்தயாராக இருக்கிறது. அவர்களுக்கு இரத்தம் தரும். தி. மு. கழகம் நாட்டு மக்களிடம் கொண்டுள்ள விசுவாசத்திற்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?

கொள்ளை இலாபம் அடிப்பவர்கள் சமூக விரோதிகள். அவர்களை ஒழித்துக்கட்ட பண்டிதர் ஆட்சி முன்வர வேண்டும். கொள்ளை இலாபம் அடிப்பவர்கள் இந்த நாட்டில் ஏராளமானோர் இருக்கிறார்கள். இவர்களை எல்லாம் வெறும் வார்த்தைகளால் ஒழித்துவிட முடியாது.

உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்கவேண்டும். என்பதற்காக இருபதாயிரம் பேர் சிறை சென்றோம். கோ. சு. மணி உயிரை இழந்தார்.

(11-ம் பக்கம் பார்க்க)

மலர்-1 | 25-11-62 | இதழ்-5

அண்ணாவுக்கு ஐந்து நிமிடம்!

அழைப்பு வந்திருக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்களுக்கு

வானொலியில் பேசுவதற்கு,

டிசம்பர் மாதம் 19-ந் தேதி இரவு ஒன்பதே கால் மணிக்கு பேரறிஞர் பேச யிருக்கிறார். அனுமதி ஐந்து நிமிடம்!

வானொலியிலிருந்து வரும் அழைப்பை ஏற்றுக்கொள்வது, தி. மு. கழகத்தின் முடிவுக்கு மாறானது என்றாலும் இன்று நாட்டின் நிலைமையை அனுசரித்து—அழைப்பு வந்தால் மறுக்காமல் ஏற்றுக்கொண்டு. வானொலியில் பேசிவிட்டு வருமாறு கழகத் தோழர்களுக்கு அறிக்கை மூலம் தெரிவித்திருந்தார் அறிஞர் அண்ணா.

இந்த அறிக்கையைப் பார்த்த பிறகுதான் வானொலி நிலைய அதிகாரிகள் அண்ணாவைப் பேச அழைத்திருக்கிறார்கள். மிகப் பெருந்தன்மையோடு ஐந்து நிமிடம் நேரமும் ஒதுக்கியிருக்கிறார்கள்!

ஆகாஷ்வாணி—என்ற நாராசமான சொல் மாறி வானொலி என்று என்றைக்கு இனிமையாக ஒலிக்கிறதோ அதன் பிறகு தான் தி. மு. கழகத்தவர் வானொலியில் பேச இசைவு தரவேண்டும். இது தி. மு, கழகத்தின் உறுதியான முடிவு.

இந்த முடிவின்படி வானொலி நிலையத்திலிருந்து வந்த எத்தனையோ அழைப்புகளை கழகத் தலைவர்களும். தோழர்களும் நிராகரித்திருக்கிறார்கள்.

வானொலியில் பேசுமாறு சென்னை மேயருக்குக்கூட அழைப்பு வந்தது. அவர் தி. மு. கழகத்தைச் சார்ந்தவர் என்ற முறையில் பேச மறுத்துவிட்டார்.

இன்று கம்யூனிஸ்ட் சீன வெறியரால் நாட்டுக்கு வந்திருக்கும் ஆபத்து பற்றிப்கொண்ட நெருப்புக்கு ஒப்பாகும்—

இதை உணர்ந்துதான் அறிஞர் அண்ணா அவர்கள் தன் உயிர்ப் பிரச்சினையான திராவிடநாடு விடுதலை முழக்கத்தைக் காலவரையின்றி ஒத்திவைத்து விட்டு, நெருப்பென வந்திருக்கும் சீனனை விரட்ட நேசக்கரம் நீட்டினார்—நேருவின் கரத்தை வலுப்படுத்துவோமென நேர்மையான முடிவு காட்டினார். எழுச்சி ஊட்டினார்! கனல் மூட்டினார்!

உள் துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் அண்ணா அவர்களின் இதய பூர்வமான ஒத்துழைப்பைச் சிறப்பாகக் குறிப்பாகப் பாராட்டினார்.

இதை இங்கே எடுத்துச் சொல்வதற்குக் காரணம்—

மாற்றானிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற தனக்கென உள்ள உயிர்க் கொள்கைகளைக்கூட ஒதுக்கி வைத்துவிட்டு, எல்லா வகையிலேயும் நேருவின் கரத்தை வலுப்படுத்த இதய பூர்வமான ஒத்துழைப்புத் தரும், அறிஞர் அண்ணாவின் பெருந்தன்மை, தமிழக அரசின் மகுடபதியாம் காமராசருக்கும்—ஆகாஷ்வாணி வியாபாரிகளுக்கும், இல்லையே என்பதை சொல்லி அழுவதற்காகத்தான்.

மீனம்பாக்கம் விமானநிலையத்தில் பத்திரிகை நிருபர்கள் காமராசரைப் பார்த்து—"தேசப்பாதுகாப்புக் கமிட்டியில் ஏன் கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக்கொண்டீர்கள்" எனக் கேட்டதற்கு "தி. மு. கழகத்தவரைச் சேர்த்துக் கொண்டிருக்கும் பொழுது கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக் கொண்டதில் என்ன தவறு" என்று கேவலமாகப் பதில் சொன்னாராம்.

ஆகட்டும் பார்க்கலாம் என்பதற்கு மேல் அவர் வாய்திறந்து பேசினால் இப்படிப்பட்ட நாற்ற மொழிகளைத்தான் அவர் நாக்கு நடை போடவிடும் போலும்.

பதவிக்குரிய சிறப்பை எல்லோராலுமா காப்பாற்றிவிட முடியும்? பாவம் காமராசர்!

"தி. மு. கழகத்தவரைச் சேர்த்துக் கொண்டிருக்கும் பொழுது கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக் கொண்டதில் என்ன தவறு?"

—விமான நிலையத்தில் நிருபர்களின் கேள்விக்கு காமராசர் பதில்.

"வெளியே இருப்பதால் தேசியப் பாதுகாப்புக்கு அபாயம் உண்டாக்கக் கூடியவர்கள் என்று கருதப்படக்கூடியவர்களை கைது செய்ய அரசாங்கம் உத்திரவிட்டது. கம்யூனிஸ்டுகளைத் தவிர வேறு கட்சிகளைச் சார்ந்த யாரையும் கைது செய்ய உத்திரவில்லை."

—பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் தமிழ் நாடு அரசாங் தலைமைக் காரியதரிசி கோபால்சாமி விளக்கம்.

தமிழ் நாட்டின் முதலமைச்சர் என்று அறிமுகம் செய்யப்பட்ட காமராசர் கேட்கிறார். தேசியப் பாதுகாப்புக் கமிட்டியில் கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக் கொண்டதில் என்ன தவறு என்று.

கம்யூனிஸ்டுகள் வெளியிலே இருந்தால் தேசியப்பாதுகாப்புக்கு அபாயம் உண்டாக்குவார்கள் அதனால் அவர்களைக் கைது செய்ய அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறது என்கிறார். அரசாங்கத் தலைமைக் காரியதரிசி கோபால்சாமி.

அது மட்டுமா, கம்யூனிஸ்டுகளைத் தவிர வேறு கட்சிகளைச் சார்ந்த யாரையும் கைது செய்ய உத்திரவில்லையாம். இதையும் சொல்பவர் கோபால்சாமிதான்.

இதிலிருந்து என்ன தெரிகிறது. தி. மு, கழகம் உட்பட வேறு எந்தக் கட்சிகளாலும் நாட்டுக்கு அபாயம் இல்லை. கம்யூனிஸ்ட் கட்சியினால் மட்டுமே தேசியப் பாதுகாப்புக்கு ஆபத்து!

காமராசர் சொல்லுகிறார் தி. மு. கழகத்தைச் சேர்த்துக் கொண்டிருக்கும் பொழுது கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக்கொண்டதில் என்ன தவறு என்று,

அரசாங்கம் அவர் மண்டையிலடித்தாற் போல் அருமையாக விளக்கம் தருகிறது.

அப்படியானால் அரசாங்கத்திற்கும் காமராசருக்கும் சம்பந்தம் கிடையாதா? மக்கள் பேசிக் கொள்வதுபோல் அவர் கொலுப்பொம்மை தானா? தேர்தல் காலத்தில் தமிழ்நாட்டு அரசுக்கு ஆள் சேர்த்துக் கொடுக்க நியமிக்கப்பட்ட வெறும் ஏஜண்ட் தானா?

அவர் தமிழ் நாட்டின் சர்வ வல்லமை படைத்த முதலமைச்சர்தான் என்றால் அந்த முத்திரைக்குரிய முழுமை அவரிடம் இல்லை! அதை விரைவில் பெற்றுக் கொள்ளுவாராக!

காமராசரின் பெருந்தன்மையில் கடுகளவும் குறையாதது தான் தமிழக வானொலி நிலையம்!

வடமொழி வார்த்தைகளையும்—சங்கீதங்களையும் வாந்தியெடுப்பதிலேயே அது வயிறு வளர்த்துக் கொண்டிருக்கிறது! ஆபாஷ வாணியை மாற்ற முடியாதென்று அடம்பிடிக்கிறது! இந்தப் பிரச்சினையை நீழக் கிளறிக்கொண்டிருக்க இது நேரமில்லை.

எத்தனையோ வேண்டாத விவகாரங்களை, சகிக்க முடியாத அபசுரங்களை, சென்னையைத் திருப்பு என்றால் "தலைவலிக்கு மருந்து தருவாயா" என்று தமிழகத்து மக்கள், வேதனையோடு கேட்கும் பரிதாப நிலைக்குத் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டிருக்கும் சென்னை ஆகாஷவாணி கம்பெனி அறிஞர் அண்ணா அவர்களுக்கு ஐந்து நிமிடம் பேச அனுமதிதந்திருக்கிறது.

யார் பேசினால் நாட்டு மக்கள் அலுப்படையாமல் மணிக்கணக்காகக் கேட்டுக் கொண்டிருப்பார்களோ, எவரால் தேச பக்தியை மக்கள் மனதில் உணர்ச்சிகரமாகப் பதியவைக்க முடியுமோ, குழந்தையும் புரிந்து கொள்ளும் வண்ணம் யார் எளிமையாகப் பேசுவாரோ அந்த நாவன்மை சேர் பேரறிஞனுக்கு ஒதுக்கியிருக்கும் நேரம் ஐந்து நிமிடம்.

இந்தியத் துணைக்கண்டம் முதலையின் வாயில் அகப்பட்டுக் கொண்டிருக்கிற நேரம். தமிகத்துமக்கள் பொன்னையும், பொருளையும் வாரித்தந்து கொண்டிருக்கிற வேளை. இந்தச் சமயத்தில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு குறைந்தது அரை மணி நேரமாவது தந்து, மேலும்மக்கள் வலிமைபெற, வாய்ப்புத்தராதது ஏன்?

தெம்பூட்டும் பேச்சுக்குக் குறைவான நேரம் தந்து திரை போட்டு மறைத்தது யார்?

கதாகாலட்சேபத்துக்கு ஒதுக்கும் நேரத்தைக் கூடவா இந்தப் பேரறிஞனின் கருத்துரைக்கு ஒதுக்கக் கூடாது?

என்ன செய்வது! கற்றாரைக் கற்றாரே காமுறுவர்!

உப்பில்லாப் பேச்சை ஒரு மணி நேரம் ஒலி பரப்புவோரே—ஒப்புக்கு அழைத்தீரோ எங்கள் அண்ணாவை.

எதிலும் சோடை போகமாட்டார் எங்கள் அண்ணன். ஐந்து நிமிடத்தில் அழகாய்ப் பேசுவார், விரைவாய்ப் பேசுவார், தெளியப் பேசுவார்!

ஐந்து நிமிடம் அவரால் உயிர் பெறும்.

— தினகரன்.

ஐயா உங்களுக்குக் கோடி வணக்கம் !

ஒன்றுமே பேசாமல் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் !!



தி. மு. கழகத்தாருக்கும் தேசபக்தி வந்திருக்கிறது. அவர்களும் அழுகிறார்கள். ஆனால் அது நெச அழுகையா? பொய் அழுகையா என்று தெரியவில்லை.

அண்ணாதுரை ஆவேசமாகப் பேசுகிறார். இவர்தான் இந்தியாவுக்கு அடுத்த பிரதமராக வருவது போல, காமராசருக்கு அடுத்து இவர்தான் முதன் மந்திரியாக வர இருப்பதாக எண்ணிக்கொண்டு !

பொதுக்கூட்டத்தில்
பெரியார் ஈ. வெ. ரா.

'வைக்கம் வீரர்,' என்று வாயாரப் புகழ்கிறோமே அவரா இப்படிப் பேசுவது ?

சமுதாய சீர்திருத்தத்தில் சாக்ரடீசையும் மிஞ்சியவர் என்று மனதார நம்புகிறோமே அவரா இப்படிப் பேசுவது ?

ஆண்டான் அடிமை ஒழிப்புக்கு இவர்தான் வித்து என்று அப்பழுக்கில்லாமல் பேசுகிறோமே அந்தப் பெரியாரா இவ்வளவு பெருந்தன்மையோடு பேசுவது?

ஐயா !

உங்கள் கூற்றுப்படி எங்களுக்குத் தேச பக்தி கிடையாது ?

ஆனால் உங்கள் நிலைமை யென்ன ?

தாங்கள் கோடிக்கணக்காகச் சேர்த்து வைத்திருக்கும் பணத்தில் தேசியப் பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்த தொகை எவ்வளவு ?

பிள்ளையாரை உடைக்கவும், கிருஷ்ணன் பொம்மையை நொறுக்கவும், பூநூலை அறுக்கவும், தேசியக் கொடியை எரிக்கவும்—தங்களைப் பின்பற்றும் தோழர்களுக்கு அடிக்கடி ஆணையிட்டு அவர்கள் உணர்ச்சிக்கு இரை போடுவீர்களே,தேசப்பாதுகாப்புக்காக ஏன் அவர்களை எந்தப் பணிக்கும் அழைக்கவில்லை?

தேர்தல் சமயத்தில் காமராசரைக் காப்பாற்ற தி.க. தோழர்களை காங்கிரசில்வேண்டுமானாலும் சேர்ந்துவிடும்படி கட்டளை யிட்டீர்களே தேசத்தைக் காப்பாற்ற இப்பொழுது ஏன் அவர்களை வட எல்லைக்கு அனுப்பிவைக்கவில்லை ?

ஐயா ! உங்கள் தேச பக்தியே தனி ரகம் !

அதைப்பற்றி நிறைய எழுதலாம்! ஆனால், உங்களைப் பற்றி அதிகம் எழுதினால் எங்கள் அண்ணா கோபித்துக் கொள்வார்.

ஆகையினால் ஐயா ! உங்களுக்குக் கோடி வணக்கம். நாட்டைக் காப்பாற்ற நாங்களிருக்கிறோம். தாங்கள் ஒன்றுமே பேசாமல் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.

உரிமை முரசு கொட்டிடு

சிங்கத் தோடு மோதுகின்ற
துணிவு கொண்ட வீரனே !
தினவெ டுக்கும் தோள்க ளோடு
உடனெ ழுந்து புறப்படு !
தங்க பூமி இந்தி யாவின்
மானம் காக்க விரைந்திடு
தாயின் மீதும் நாட்டின் மீதும்
ஆணை கூறிக் கிளம்பிடு !

நாற்பத் தைந்து கோடி மக்கள்
வாழும் இந்தப் பாரதம்
நாய்க ளுக்கும் பேய்க ளுக்கும்
அடிமை யில்லை என்றிடு !
ஆர்ப்ப ரிக்கும் சீன நாயின்
முதுகெ லும்பை முறித்திடு !
அக்ர மத்தின் வேரைக் கிள்ளி
நீதி தன்னைக் காத்திடு !

சிந்து கங்கை யமுனை பாயும்
வீர மண்ணில் பிறந்தவர்
செக்கி ழுத்த வீர மைந்தன்
சிதம்ப ரத்தின் பரம்பரை
நைந்து நொநது கண்ணீர் மல்கி
நலிவ டைந்து போவதா?
நாம டைந்த சுதந்தி ரத்தைப்
பறிகொ டுத்து வாழ்வதா

கண்ணை விற்றுச் சித்தி ரத்தைக்
கையில் வாங்கிக் கொள்வதா ?
கருணை யற்ற சீனர் காலில்
அடிப ணிந்து வீழ்வதா ?
விண்ணை முட்டும் புகழ் படைத்த
பார தத்தின் வீரர்நாம்
வெறிய ரான சீனர் தம்மை
விரட்டும் வரை ஓய்ந்திடோம் !

பொதுவுடமைத் தத்து வத்தைப்
புழுதி மண்ணில் சேர்த்திடும்
புல்லர் தம்மை ஒழிக்கும் வரை
வாளுக் கில்லை ஓய்வினி
கொதிக்கும் நெஞ்சில் எரிம லையைச்
சுமந்தி ருக்கும் தோழனே !
கொந்த ளிக்கும் நெருப்பைக் கக்க
குதித்தெ ழுந்து கிளம்பிடு !

ஒன்று பட்ட பார தத்தின்
உரிமை முரசு கொட்டிடு
உறங்கும் புலியை எழுப்பிவிட்ட
உலுத்தர் தம்மை விரட்டிடு !
இன்று போரில் உயிர்கொடுக்கும்
தியாக வீரர் பரம்பரை
என்றும் வாழ வேண்டும் என்று
வெற்றிப் பரணி பாடிடு !

—துறையூர் ந. அலி.

இயக்கத்தின் இந்திரஜித்!



கழகத் தோழர்கள் அறிஞர் அண்ணாவை மட்டுமே 'அண்ணா' என்று எப்படி அழைக்கிறார்களோ, அது போல் 'தம்பி'—என்று எல்லாராலும் அழைக்கப்படுபவர் தோழர் முரசொலி மாறன் எம். ஏ. அவர்கள்தான்!

பச்சையப்பன் கல்லூரியில் படித்து பி. ஏ. (ஆனர்ஸ்) பட்டம் வாங்கியபோது இவருக்கும்-இவரது குடும்பத்தினருக்கும் இருந்த எண்ணம் பலித்திருக்குமானால் இவர் வக்கீலாக மாறியிருப்பார்; வன்மை சேர் எழுத்து வேந்தர் ஆகியிருக்க மாட்டார்!

இவரது வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றம்கூட கலைஞர் கருணாநிதியால் ஏற்பட்டதுதான். கண் நோயால் அவதிப்பட்ட கலைஞர் பெருந்தகை மருத்துவமனை சேர்ந்த போது, தோழர் மாறன் சட்டக் கல்லூரி மாணவராகத்தான் இருந்தார்; 'முரசொலி'யைக் கவனிக்கும்பொருட்டு, தன் படிப்பைத் தியாகம் செய்து பத்திரிகை உலகில் புகுந்தார்; அதனால் அவர் இழந்தது, சட்டக்கல்லூரி மட்டும்தான்! பெற்றதோ, பத்திரிகை உலகில் பசுமை மாறாப் பெயர்!

இவரது பால்யப் பருவத்திலும் சரி-படிக்கும்போதும்சரி-விளம்பரம் தேடவேண்டிய இந்தப் பருவத்திலும் சரி—இவரைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய அளவிற்கு எங்காவது அடக்கமாக அமர்ந்திருப்பார்! 'அடக்கம் அமரருள் உய்க்கும்'—என்று படித்துப் பெற்ற பண்பு அல்ல அது; அவரது உடன் பிறந்த பண்பு அது!

பத்திரிகை உலகில் செய்தது போல—படவுலகிலும் புதுமைகளைச் செய்யத் துடிப்பார்; வெறும் காதலும் - காதலில் தோல்வியும் வைத்துக் கொண்டு, 'புதுமைப் போலிக் கூத்து' ஆடுவது இவருக்குப் பிடிக்காத ஒன்று; வாழ்க்கையில் இடியென மோதும் பிரச்சினைகளை அவர் வசனமெழுதிய திரைப் படங்களில் காணலாம்!

இவரது கதைகளில் இதுவரை தமிழகத்து கதை ஆசிரியர்கள் செய்யாத புதுமைகள் உண்டு! அதிலே ஒன்று—ஒரு சாண் வயிற்றால்தான் குற்றங்கள் பெருகுகின்றன என்ற தத்துவத்தை ஒரே ஒரு சிறு கதை மூலம் இடித்துத் தள்ளியது! வயிறு இல்லாது போனால் குற்றங்கள் குறையாது; பெருகும்!—என்று அருமையாக அந்தக் கதையிலே கூறுகிறார்; இப்படி ஒவ்வொரு கதையிலும் தங்கச் சுரங்கத்தில் காணும் தங்க ரேகைபோல் தத்துவம் ஓடும்!

பத்திரிகை உலகில் இவரது இடத்தைக் கேட்க வேண்டுமானால், கழகத் தோழர்களைக் கேட்காமல் - கம்யூனிஸ்டுகளைக் கேட்டால் போதும்! இடிக்குப் பாம்பு அஞ்சுவதுபோல்—வெடிக்கு மான் துள்ளுவது போல்-மழைக்கு ஓட்டை வீட்டுக்காரன் பயப்படுவதுபோல், மாறன் என்ற பெயர் கேட்டால் போதும் மாரடைப்பு ஏற்பட்டுவிடும் கம்யூனிஸ்டுகளுக்கு!

இத்தனைக்கும் அவர் கம்யூனிசத்தை வெறுப்பவரல்லர்; 'முரசொலி' அலுவலகத்தில் அவர் அறையில் மார்க்ஸ்—ஏங்கல்ஸ் ஓவியம் இருப்பதைக் காணலாம்; அவரது உட்காரும் இடத்திற்குமேல் ஆவேசமாகச் சொல்மாரி பொழியும் லெனினைக் காணலாம்; அது மட்டுமல்ல அவரது நூலகத்தில் கம்யூனிச இலக்கியங்கள் அத்தனையும் இருக்கிறது!

படிப்பது அதிகம்; எழுதுவது குறைவு—என்று கூறுகிற அளவுக்கு எப்போதும் படித்து சிந்திக்கும் பழக்கத்தைக் கொண்டவர் மாறன்; அவரது நூலகத்தில் நுழைந்துவிட்டால் எதைப் படிப்பது என்று தெரியாத அளவிற்கு அவ்வளவு பெரிய நூலகம் அவருடையது!

முரசொலியின் புகழில் பாதி புகழ் அவருக்குரியது! ஆசிரியர் கருணாநிதி சுற்றுப்பயணத்தில் இருக்கும்போதும்— சிறைக் கோட்டத்தில் வதியும்போதும் முரசொலியின் சூடு தணியாது கீர்த்தி சேர்த்தவர் மாறன்!

அறப்போர் நடந்த பின் ஏறக்குறைய எல்லாக் கழகத் தலைவர்களும் காராக்கிருகத்தில் அடைபட்டிருந்தபோது—கழகத் தோழர்கள் காட்டு மிருகங்கள்போல் வேட்டையாடப் பட்டபோது—கனம் மந்திரிகள் 'தலைகால்' தெரியாது நாவால் தாக்கியபோது—தமிழகத்துக் கட்சிகளெல்லாம் ஒன்று திரண்டு நம்மை அழிக்க கொடுவாள் தூக்கியபோது—அத்தனைக்கும் ஈடு கொடுத்த பத்திரிகைகளில் தலையாயது முரசொலி. சோர்ந்த உள்ளங்களில் சூடேற்றி — தளர்ந்த நாடி நரம்புகளில் முறுக்கேற்றி —மாற்றார் மருள முரசொலித்தது-முறுவலிக்கும் நமது இளவல் மாறன்தான்! அந்த ஒரு பணிக்காக, அவருக்கு எத்தனை புகழ் மாலைகள் வேண்டுமானாலும் சாற்றலாம்!

செய்த சேவைக்குத் தகுந்த புகழைப் பெறக்கூட அவர் தயக்கம் காட்டுவார்; தப்பி ஓடிவிடப் பார்ப்பார்!

அவர் பலமாகச் சிரித்ததைச் சிலர்தான் பார்க்கமுடியும்; அவருக்கென்று ஒரு நண்பர் குழாம் இருக்கிறது. அந்தக் குழாமில் இருக்கும்போது அவர் சிரிக்கும் சிரிப்பு கட்டிடமே இடிந்து விழும்போல் இருக்கும்! ஆனால், தனியே பார்க்கும்போது 'ரிசர்வர்ட் மைன்ட்' (அதிகம் பேசாதவர்)போல் தோன்றும்!

அடக்கமாக இருப்பாரே தவிர, சோம்பேறியாக இருக்க மாட்டார்; எப்போதுமே துருதுருவென்று பணியாற்றிக் கொண்டே இருப்பார்.

இந்தப் பண்புதான் அறிஞர் அண்ணாவிடம் மாறனுக்கு மிகுந்த செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கிறது! முரசொலிக்கு அறிஞர் அண்ணா வந்தால் முதலில் கேட்கும் கேள்வி "தம்பி மாறன் இருக்கிறாரா?" என்பதுதான்!

தான் படித்துப் பயன்பெற்ற புத்தகங்களைக்கூறி அவற்றைத் தவறாது வாங்கிப் படிக்க மாறனைத் தூண்டுவார் அண்ணா! அறிஞர் அண்ணாவிடம் மாறன் பழகும்போது பார்த்தால் மிகவும் வேடிக்கையாக இருக்கும்!

எம். ஏ. படித்தவர்—பத்திரிகையின் பொறுப்பாளர்—நிறைந்த கல்வியுடையவர்—என்ற எண்ணத்தின் சுவடு சிறிதும் இல்லாதவகையில் தந்தையிடம் தமயன் பழகுவதுபோல் அண்ணாவிடம் மாறன் பழகுவார்!

நிறத்தைப் போலவே அவரது குணமும் தங்கம்தான்! அவரிடம் அன்பைப் பெறுவது தங்கச் சுரங்கத்தில் தங்கம் பெறுவது போன்ற கஷ்டமான பணிதான்! ஆனால், கிடைத்துவிட்டாலோ, அந்த அன்புத் தங்கம் கையைவிட்டுப் போகவே போகாது!

இவ்வளவு சிறிய வயதில்—இவ்வளவு பெரிய புகழையும் அறிவாற்றலையும் பெற்றிருந்தும் இன்னும் தன் அறிவாற்றலைப் பெருக்க ஓயாது உழைப்பவர் மாறன்!

மாறன்என்றதுமே மாற்றுக் கட்சிக்காரர்களுக்கும், மற்றவர்களுக்கும் நினைவு வருவது 'ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?'

ஆம்; அந்தப் புத்தகத்தைப் படித்துத் தெளிவடைந்தோர் ஆயிரக்கணக்கான பேர்; அந்தப் புத்தகத்தைப்படித்து அற்பக் கேள்விகளை எழுப்பாமல் வாயடைத்துப் போன அரசியல்வாதிகள் ஏராளம் உண்டு!

அது மட்டுமல்ல; அந்தப் புத்தகத்தைப் படித்தோர் மாறனின் அறிவு வளத்தை அறிவார்கள்; ஆதாரங்களை அவர் அள்ளிவீசும் தன்மையை உணர்வார்கள்; இத்தனைக்கும் மேலாக அவரது ஓயா உழைப்பினை நினைப்பார்கள்!

எழுத்தில் மட்டுமே ஏற்றம் பெற்று வந்த மாறன்—அண்மையில் கழகத்தில் தலைவர்கள் சிறையில் இருந்தபோது பேசவும் செய்தார். இரண்டு மூன்று கூட்டங்களிலேயே நா வளமும் படைத்தவர் நம் மாறன்—என்ற புகழ்ப் பெயரையும் எடுத்து விட்டார்!

மாறன்—நமக்குக் கிடைத்த களஞ்சியம்! கறையில்லாத பொன்; கரை சேர்க்க வந்த கப்பல்!

மாறன்—என்றால் வீரன்! மாறன் என்றால் அழகன்! எழுத்தில் வீரமும், தோற்றத்தில் அழகும் படைத்த நமது முரசொலி மாறன் மேலும் வளர்க! வாழ்க!

—'அலை'

அழிந்து கொண்டிருக்கும் சீனத்தைப்
புதைகுழிக்கு அனுப்புவோம்!
கம்யூனிசத்தின் பரமவைரி செஞ்சீனம்



தென் சென்னை தந்த எம். பி.
தென்னகத் தலைவனின் தம்பி

முற்றி விளைந்த அரசியல் வாதிகள் நிறைந்த, தில்லிப் பாராளுமன்றத்தில் கம்யூனிஸ்ட் சீன ஆக்கிரமிப்பைப் பற்றி ஆற்றிய ஆணித்தரப் பேச்சு முழுவதும் இந்தப் பகுதியில் இடம் பெற்றிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சீன ஆக்கிரமிப்பினைப் பற்றிச் சிலகருத்துக்களை இம் மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

எங்களது ஒப்பற்ற தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் வேலூர் சிறைச்சாலையிலிருந்து வெளிவந்த மறுகணமே இந்திய மண்ணிலிருந்து சீனப் படைகளைத் துரத்தும் முயற்சியில், நேருவின் கரத்தை தி. மு. க. முழு மூச்சுடன் பலப்படுத்தும் என்று அறிக்கையின் வாயிலாக அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். அதுவுமல்லாமல், பொருள், குருதி, வியர்வை உழைப்பு ஆகிய அனைத்தும் கழகத்தின் சார்பில் கொடுப்போம் எனவும் அறிவித்துள்ளார்.

இவற்றிற்கெல்லாம் மேலாக இந்திய மண்ணில் இருந்து சீன ஏகாதிபத்யம் வெளியேறும்வரை இப் புனிதப் பணி ஈடேறும் வகையில் துணை புரிய கழகத்தின் தத்துவ வளர்ச்சிக்கான முயற்சிகளைக்கூட ஒத்திவைத்திருக்கிறது. என்று சர்க்காருக்கு அறிவித்துள்ளார். எனவே எங்களது தலைவர் எடுத்துக் கூறியதுபோல நிபந்தனையற்ற எங்களது ஒத்துழைப்பு இச் சீரிய முயற்சியில் சர்க்காருக்கு பக்க பலமாகத் திகழும் என்றும் உறுதி கூறுகிறேன்.

போர் விளிம்பில் இன்று இந்தியா நின்று கொண்டிருக்கிறது. இந்த நாடு இது வரையில் காணுத ஓர் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. நாடு விடுதலை பெற்ற பின்பு சுதந்திரத்திற்கு ஏற்பட்ட முதல் ஆபத்தான நேரம் இது! இந்திய வரலாற்றில் இன்றுதான் முதன் முதல் ஜனுதிபதியின் அவசர கால ஆணையும், பாதுகாப்பு அவசரச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டுள்ள தருணம் இது!

தொலை தூரத்தில் ஆபத்து! அழிவின் விளிம்பில் நாடு நின்றுகொண்டுள்ளது. போர் மேகங்கள் எங்கும் அஞ்சத்தக்க வகையில் சூழ்ந்து வருகின்றது. ஆபத்தின் அலைகள் எப்போது வீசுமோ என்ற அஞ்சத்தக்க நிலை!

ஆழ்ந்த உறக்கத்தில் மக்கள் அவர்களிடையே பலமானதோர் தாக்குதல் எங்கும் எழுச்சி! எங்கும் விழிப்பு! இனி உறக்கம் என்பதே அவர்களை நாடாது. அருவருக்கத்தக்க நிலையில் சீன ஏகாதிபத்தியம் காட்சி அளிக்கின்றது. அது இந்தியாவிலிருந்து விரட்டப்படும் வரை நாடு ஓயாது. அதன் இடை சாயாது.

கட்சிகளும் சர்க்காரும் தங்களிடையே நிலவும் வேறுபாடுகளைக்கூட மறந்துவிட்டு, சீன ஆக்கிரமிப்பாளர்களைச் சின்னு பின்னப் படுத்தும் வினை முயற்சியில் ஒருமுகப்பட்டுள்ளனர்.

துணைச் சபாநாயகர் அவர்களே! ஆக்கிரமிப்பு எந்த வடிவத்தில் தோன்றினுலும் எதிர்ப்பவர்கள் நாங்கள். பய உணர்வும் தாழ்வு மனப்போக்கும்தான் அதன் கூட்டுத் தோழர்கள். அதுவுமல்லாமல் ஆக்கிரமிப்பாளர்களின் போக்கு அறவழிப் பாதையும் அல்ல!

ஆக்ரமிப்புஉருவாக்கும் கேடுகள்தான் எவ்வளவு! அது மனித ஒழுக்கத்தையே சீர் குலைக்கிறது. நல்லுணர்ச்சிகளை அழிக்கிறது.

ஆக்கிரமிப்பின் இதயத் துடிப்பு நாடு பிடிக்கும் வெறி!

ஏகாதிபத்தியத்தின் இதய ஒலிதான் ஆக்கிரமிப்பு! ஆக்ரமிப்பு—பலஹின உள்ளத்தின் பிரதி பலிப்பு!

எனவே சீன ஆக்கிரமிப்பு என்பது பீகிங் சர்க்காரின் மன வளக் குறைவின் எதிரொலியே தவிர, வேறல்ல!

நேற்றைய தினம் இம் மாமன்றத்தில் பேசுகின்ற போது பிரதம அமைச்சர் அவர்கள் மக்கள் சீனத்தை ஐக்கிய நாடுகள் அவையில் சேர்க்கவேண்டும் என்பதற்காக இந்தியா எடுத்துக் கொண்ட சீரிய முயற்சிகளையெல்லாம் எடுத்துச் சொன்னுர்கள். அவர்கள் கூறிய காரணங்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைந்திருந்தன. நீண்ட நிலப் பரப்பையும் அதிக அளவு மக்கள் தொகையினையும் கொண்ட சீனத்தை ஐ. நா. மன்றத்தில் சேர்க்காத வரை, படைக் குறைப்பு என்பதெல்லாம் சுவைமிக்க வார்த்தைகோவைகளாக அமையுமே தவிர செயல்படும் நடைமுறை திட்டங்களாகாது என்றும் எடுத்துக் கூறினுர். மேலும் எவ்வளவு தான் கசப்பான எண்ணங்களாயிருந்தாலும் அவைகள்கூட உலக மாமன்றத்தில் பிரதிநிதித்வம் பெற்ருக வேண்டும் என்றும் எடுத்துச் சொன்னுர்கள். அதன் வழி இந்தியா என்றும் நடைபோட்டுக்கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல், மேற்கத்திய நாடுகளின் நட்புறவை இழக்கும் தறுவாயில்கூட செஞ்சீனத்திற்காக இந்தியா போராடிக் கொண்டிருக்கிறது.

சீனப் பிரதமர் சூ-என்-லாய் 1956ல் இந்தியாவிற்கு வருகை தந்தார். மகத்தானதோர் வரவேற்பு மக்களால் அளிக்கப்பட்டது. அதுமுதல் "இந்தோ சீனு-பாய்! பாய்!!" முழக்கம் அரசியல் வானில் முகிழ்த்தது ஆசிய கண்டத்தின் இவ்விரு நாடுகளின் நட்புறவால் பிறந்த ஓர் அழகான குழந்தைதான் "பஞ்சசீலம்" துரதிருஷ்ட வசமாக சம்பவங்கள் வேறு திசை நோக்கி செல்லத் துவங்கின. ஈன்றெடுத்த மகவை தந்தையே புறக்கணிப்பதுபோல், பஞ்சசீலக் குழந்தையை சீனப் பிரதமரே புறக்கணிக்கிருர்.

இதனை வேறு வகையில் கூறினுல் நமது பிரதம அமைச்சர் நேருவும் சீனப் பிரதமரும் பஞ்சசீலத்தின் கதாநாயகர்கள். நிலைமையில் இன்று தலைகீழ் மாற்றம் நமது பிரதமரோ கதாநாயகனுகத் திகழ்கின்ருர் சீனப் பிரதமரோ வில்லனுக மாறிவிட்டார். ஆனுல் வில்லன்களின் பரிதாபமான முடிவை நீங்கள் அறியாததல்ல!

நான் சூ-என்-லாய் அவர்களைக் கண்டு அநுதாபப்படுகிறேன். இந்தியாவின் மனத் தூய்மையினை உணர்ந்த பின்பும், ஜனநாயக போக்கினையும் உணர்வினையும் அறிந்த பின்பும், ஏகாதிபத்ய மனப்பாங்கோடு படையெடுத்திருக்கும் செயலானது வரலாற்றில் என்றும் காண முடியாத ஈவிரக்கமற்ற செயலாகும். எனவே சீனம் ஒரு நன்றிகெட்ட-நயவஞ்சக, நாகரிகமற்ற நாடு எனக் குற்றம் சாட்டுகிறேன்.

ஆசியாக் கண்டத்திலேயே இந்தியாதான் மிகப் பெரிய ஜனநாயக நாடு. நமது அண்டை நாடுகள் அனைத்தும் வேறு அரசு முறைக்கு திசை மாற்றிக்கொண்ட போதும் இந்தியா ஜனநாயக வழியிலேயே நின்றது.

நமது ஜனநாயகத்திற்கு இன்று ஓர் ஆபத்தான சூழ்நிலை. சில ஆண்டுகளுக்கு முன் நட்புறவோடு திகழ்ந்த சீன நாட்டிலிருந்து அந்த ஆபத்து கிளம்பியுள்ளது.

இன்று நடைபெறும் போர் ஜனநாயகத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் நடக்கும்

பார்மோசாவுக்குப் பயப்படும் சீனு!
இந்தியாவை மிரட்டும் இழிநிலை!
சீனு ஒரு நன்றிகெட்ட நயவஞ்சகநாடு

சமர். ஏகாதிபத்தியம் என்பது நமது இயல்புகளுக்கு மாறுபட்ட கோட்பாடு. அந்தக் கொடிய தத்துவத்தை நம்மால் விழுங்கவோ செரிக்கவோ இயலாது. நமது சக்திகள் அனைத்தையும் ஒரு முகப்படுத்தி ஒதுக்கிவைக்கவேண்டிய தத்துவம் ஏகாதிபத்யம். அதுவோர் செல்லரித்த கோட்பாடு என்பது மட்டுமல்ல இயற்கைக்கு முரண்பட்டதுமாகும். எனவே அது உலகின் எந்த திக்கிலும் வேர் ஊன்ற முடியாது என்பது மட்டும் திண்ணம்.

துரதிருஷ்டவசமாக அழிந்து கொண்டிருக்கும் ஏகாதிபத்யம் தனது அருவருக்கத் தக்க முகத்தை சீனத்தில் காட்டிக் கொண்டிருக்கிறது. அதனை புதைக்குழிக்கு அனுப்பி சாவு மணி அடிப்பவர்கள் நாம் என்பதில் சந்தேகமில்லை. இந்த அரிய பணிக்கு வாய்ப்பளித்த சீனத்திற்கு நாம் நன்றி செலுத்துவோம்.

நாள் தோறும் பொய்ப் பிரச்சாரத்தில் சீன சர்க்கார் ஈடுபட்டுள்ளது. வீரத்தைப் பற்றியும் தியாகத்தைப் பற்றியும்,வலிமையை பற்றியும்அது பேசாத நாளே கிடையாது. சீனத்தின் வாய்ப் பந்தல்கள் நமக்குச் சிரிப்பைத்தான் மூட்டுகின்றன. பார்மோசா தீவில் சியாங்கே ஷேக் கம்பீரமாக நின்று கொண்டிருக்கிருன். அந்த அரசை சீனத்தின் ராணுவ பலம் என்ன செய்ய முடிந்தது? உள்ளங்கை அளவுள்ள பார்மோசாவைத் தொட திராணி அற்றவர்கள் ராணுவ பலத்தைப் பற்றிப் பேசுவது எவ்வளவு கேலிக்குரியது? சீன அரசு பார்மோசாவைத் தொட முடியாது. காரணம் அமெரிக்காவின் ஏழாவது கப்பல் தளம் அங்கே அணியாக நிற்கின்றது. சீன சர்க்கார் இன்று வேட்டுச் சத்தம் அன்றி வேறு மொழி அறியாததாக உள்ளது. அதன் காரணமாகத்தான் இந்தியா போன்ற சமாதானம் விரும்பும் நாடுகளை பாழ்படுத்த விழைகின்றது.

சீனத்தின் அறைகூவல்களை ஏற்றுக்கொள்வோம். ஏகாதிபத்திய காளையின் கூர்மைமிக்க கொம்புகளைப் பிடித்து அதன் திமிர்தனை அடக்கவும் சூளுரை கொள்வோம். இதுதவிர வேறு மார்க்கமே நமக்குக் கிடையாது.

கீர்த்தி இழந்தபின் நாட்டிற்கு சமாதானம் தேவை தானு?

கற்பு சூரையாடப்பட்டபின் ஒரு பெண்ணுக்கு நன்றியுணர்ச்சி அவசியம்தானு? தன்மானம் பறிக்கப்பட்டபின் பெருந்தன்மையாக நடக்க வேண்டும் என்பது நியாயம் தானு?

இந்தியாவின் கற்பு, தன் மானம், கீர்த்தி அனைத்துமே அழிந்தொழிந்து போகும் வகையில் ஆபத்தில் சிக்கியுள்ளது. எனவே நெருக்கடிகளை உறுதியால் சமாளிப்போம்!

அறவழி, சமாதானம், சகிப்புத்தன்மை ஆகியவைகளில் ஈடுபாடு கொண்ட இந்தியாவின் மீது சீனம் படையெடுத்துள்ளது! அது நமக்கு மிக்க ஆத்திரத்தை அளிக்கின்றது. அதன் விளைவு எவ்வளவோ முனையில் நமது சிந்தனைகளைக் கிளறுகின்றது!

மார்க்கசீயம் — லெனினிசம் என்ற கோட்பாடு மண்ணுசை வெறியின் ஊற்றுக்கால்களா என்று உலகம் சந்தேகிப்பதில் எவர் குறைகூற முடியும்? கம்யூனிசம் என்ற தத்துவத்தின் பரமவைரியாகவே செஞ்சீனம் விளங்குகின்றது. துணைச் சபாநாயகர் அவர்களே!

சென்னை சட்டமன்றக் கழக உறுப்பினர்கள் தங்களது ஒரு மாத ஊதியத்தை தேசிய பாதுகாப்பு நிதிக்கு அளிப்பதாகக்கூறியுள்ளனர்.

சீன ஆக்ரமிப்பாளர்களை விரட்டும் இப்புனிதப் பணிக்கு எங்கள் காணிக்கையாக தி. மு. க. பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எங்களது ஒருமாத ஊதியத்தை தேசிய பாதுகாப்பு நிதிக்கு அளிக்கிருேம். என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டில் கிளர்ந்துள்ள எழுச்சிகளை ஒருமுகப்படுத்தி சமாதானம் ஜனநாயகம் ஆகிய புனிதக் கோட்பாடுகள் வெற்றிக்காண முழு மூச்சுடன் வெற்றி காண்போம் என்று கூறி எனது உரையை முடிக்கிறேன்.

இவர்களைப் பற்றி மெயில் ஏடு...

என்னதான் கம்யூனிஸ்டுகள் இப்போது சொன்னுலும், அகில உலகக் கம்யூனிசத்திற்குப் பாதை போடுபவர்கள் என்ற எண்ணத்தை அழித்துவிட முடியாது! அண்மைக் காலம் வரை சீன ஆக்கிரமிப்பை "நிகழ்ச்சி" என்றும் "சம்பவம்" என்றும் கம்யூனிஸ்டு தலைவர்கள் பேசியதை பொதுமக்கள் மறக்கவில்லை.

கம்யூனிஸ்டு கட்சியின் தேசிய கவுன்சிலுக்குப்பின் "ஆக்கிரமிப்பு" என்ற வார்த்தையைப் பயன் படுத்தினுர்கள்.

மராட்டியம், வங்காளம், ஆந்திரம் ஆகிய மாநிலங்கள்—மத்திய அரசாங்கம் உள்பட தேசியப் பாதுகாப்புக் கமிட்டியில் கம்யூனிஸ்டுகளைச் சேர்க்கவில்லை. தமிழக அரசு மட்டும் சேர்த்திருக்கிறதென்ருல் அதற்கு ஏதாவது காரணம் இருக்கமுடியும். கம்யூனிஸ்டுகளைப் பாதுகாப்புக் கமிட்டிகளில் சேர்க்கும் விஷயததில் இந்தியா முழுவதும் ஒரே கொள்கை இருப்பது நல்லது.

"தென்னகந் தலைவன்" வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறிவிக்கிருேம்!

9-12-62 இதழில் ஆரம்பமாகிறது.

எஸ். எஸ். தென்னரசு

எழுதும் தொடர் கதை

"வைராக்கியம்"

தென் மாவட்டங்களில் தீரச் செயல் புரிந்த வல்லவர்களின் உணர்ச்சி மாலையே இந்தக் கதை!

கிழமைதோறும் உங்களுக்குக் கிடைக்கும் கொம்புத்தேன்! சுவைக்கத் தவருதீர்கள்!!

விற்பனையாளர்கள் அதிகப் பிரதிகளுக்கு முன் பணத்துடன் எழுதுக.

ஐந்தாம் படை யார்? சந்தேகம் தீர்ந்தது!

"நாட்டில் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் ஐந்தாம் படை வேலையில் ஈடுபட்டுள்ளதாக அரசாங்கத்திற்கு தகவல் வந்துள்ளன. இப்படிப்பட்ட நாசவேலைகளை அரசாங்கம் சகிக்காது. அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்." மக்கள் சபையில்

லால்பகதூர் சாஸ்திரி

"வெளியே இருப்பதால் தேசியப் பாதுகாப்புக்கு அபாயம் உண்டாக்கக் கூடியவர்கள் என்று கருதப்படக் கூடியவர்களை கைது செய்ய அரசாங்கம் உத்திர விட்டது! சுமார் நூறு பேர்களைக் கைது செய்ய உத்திரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்டுகளைத் தவிர வேறு கட்சிகளைச் சார்ந்த யாரையும் கைது செய்ய உத்திரவு இல்லை.

—பத்திரிகை நிருபர்களிடத்தில் தமிழ் நாடு அரசாங்கத் தலைமைக் காரிய தரிசி கோபால்சாமி விளக்கம்.

ஆக்கிரமிப்பை அழிக்க ஏகாதிபத்தியத்தை ஒழிக்க முழு ஆதரவு தருவோம்

சர்க்கார் செய்யும் தவறுக்கெல்லாம் சப்பைக் கட்ட மாட்டோம்!

சிறை மீண்டு வந்தோம் என்ற அளவிலே பாராட்டுகிறீர்கள். வெறும் சிறை மீண்டு வந்ததற்காகவும் அல்ல; அறப்போரில் ஈடுபட்டுச் சிறை சென்று மீண்டமைக்காக! வெறும் அறப்போர் மறியல் அல்ல; விலைவாசி உயர்வினை எதிர்த்துச் சிறைசென்று மீண்டமைக்காக இந்தப் பாராட்டு! சாதாரண விலைவாசி உயர்வை எதிர்த்துமட்டுமல்ல; ஏழை, எளிய, நடுத்தர மக்களால் தாங்க முடியாத அளவு ஏறியிருக்கிற விலைவாசி உயர்வை எதிர்த்து மறியல் செய்து சிறை சென்று மீண்டமைக்காகப் பாராட்டுகிறீர்கள்!

நாங்கள் எடுத்துக்கொண்ட செயல்களுக்காக முயற்சிகளுக்காகப் பாராட்டுகிறீர்கள். உறுதியோடு— உணர்ச்சியோடு-எழுச்சியோடு பாராட்டுகிறீர்கள். நீங்கள் தந்த, தருகிற பாராட்டு பூரிப்பைத் தருகிறது—பெருமை தருகிறது. நாங்கள் செய்தசெயல் நாட்டு மக்களால் பாராட்டப்படுகிற செயல்தான்.

நாங்கள் ஓசிச் சோறு சாப்பிடுவதற்காகவும்; ஓசிப் படுக்கைக்காகவும் சிறை சென்றதாக சந்துமுனைகளிலே சாதாரண இழிமக்கள்கூட அல்ல; நாட்டை ஆளும் முதலமைச்சர் பேசியுள்ளார்.

நாங்கள் செய்த காரியம் நாட்டு மக்களால் பாராட்டப்படுவது; அசைக்க முடியாதது, நேர்மையானது — நாணயமானது. நாட்டு மக்களால் பாராட்டப்படுவது. இதை தி. மு. கழகம் நடத்திய ஊர்வலங்களிலும், பொதுக் கூட்டங்களின் மூலமாகவும் பார்த்திருப்பீர்கள்.

நமது நாடு நமக்காகவேண்டும். நமது தாய்மொழி ஆட்சி மொழியாகவேண்டும். நமது உரிமை நமக்காகவேண்டும். நாம் உரிமை பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்று கூறுகிறோம்.

இதைக் கேலி செய்பவர்கள் பலர் இருந்தாலும், எங்களுடன் பலர் சேருகிறார்கள்; சேருவார்கள்.

நாங்கள் எடுத்துக்கொள்ளும் செயல்களிலே பொலிவு அதிகம். அதைவிட வலிவும் அதிகம். வலிவு இருப்பதால் மக்கள் ஆதரவு இருக்கிறது.

இவ்வளவுக்குக் காரணம் எங்கள் கொள்கையிலே நாணயம் இருக்கிறது என்பதை மக்கள் உணர்ந்திருப்பதுதான்.

விலைவாசிஉயர்வைக் குறைக்கச் சொன்னோம். சிறையிலே அடைத்தார்கள். விலைவாசி உயரவில்லையா? மக்கள் கஷ்டப்படவில்லையா? கள்ளக் கணக்கு எழுதப்படவில்லையா?

சமீபத்தில் பத்திரிகையில் பார்த்தேன், ஒரே மாதத்தில் ஒரு கோடி ரூபாய் தங்கம் கள்ளக் கடத்தல் செய்யப்பட்டதாக! இதுபோன்ற செயல்கள் நடைபெறவில்லையா? நாங்கள் என்ன இட்டுக் கட்டிச் சொல்கிறோமா? இது என்ன அண்ணா சொன்ன கற்பனையா?

நாங்கள் சட்டமன்றத்திலும் சொன்னோம். வெளியிலும் சொன்னோம்; சொல்லுகிறோம். விலைவாசி உயர்வைக் குறைக்க நிபுணர் குழு அமைக்கச் சொன்னோமே; துணிவிருந்ததா அமைக்க? தங்களைத் தட்டிக் கேட்பாரில்லை என்ற ஆணவத்தால் அகந்தையோடு இருந்தார்களே தவிர வேறு என்ன செய்தார்கள்?



"தி. மு. கழகக்காரர்களுக்கு இது ஒரு நவநாகரீகமான பேச்சு! இட்டுக்கட்டிச் சொல்லுகிறார்கள்! விலைவாசி உயரவில்லை" — என்றுதானே சொன்னார்கள்.

கள்ளம் கபடமான எண்ணம் எங்களிடம் இல்லை. நாங்கள் சொன்ன வார்த்தை, எங்களை ஏசுவதற்கும், தூற்றுவதற்குமே அவர்களுக்குப் பயன்பட்டது. நாங்கள் நல்லதைச் சொல்வதால் காங்கிரஸ்காரர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்.

நாங்கள் சிறையிலே இருக்கிற பொழுது, காங்கிரஸ் மைதானத்திலே கக்கனின் மனைவியும், பக்தவத்சலத்தின் துணைவியாரும் மாநாடு கூட்டி விலைவாசி உயர்வினைக் கண்டித்தார்கள். அதிலே டி.டி.கே.யும் கலந்துகொண்டார். அந்தக் கூட்டத்திலே டி. டி. கிருஷ்ணமாச்சாரி பேசும்போது, "பதுக்கல்காரர்களைக் கண்டுபிடிக்க அரசாங்கத்திற்குத் தைரியமில்லை"—என்று கூறி நிலையை விளக்கினார்.

இதை மந்திரிகள் மறுத்தார்களா? 54 பக்கங்கள் அடங்கிய பட்ஜெட்டில் — 113 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட அந்தப் புத்தகத்தில் ஒரு இடத்திலாவது விலைவாசி உயர்வைப் பற்றி நடவடிக்கை எடுப்பதாக ஒரு வரி உண்டா?

சட்டமன்றத்திலே நாங்கள் இதை எடுத்துச் சொன்னபோது உடனே அமைச்சர்எழுந்து "இதற்கு அவசியம் எதுவுமில்லை; விலைவாசியில் புதிய மாறுதல் எதுவுமில்லை" என்றல்லவா பதில் கூறினார்.

அமைச்சர்களின் மனைவியர்களாலேயே விலைவாசி உயர்வைத் தாங்க முடியவில்லையே! 1500 சம்பளம் வாங்குகிற மந்திரிகளின் வீட்டிலேயே விலை உயர்வை தாங்க முடியவில்லை, இதை அமைச்சர்களின் மனைவிமார் சொன்னார்கள், நாங்கள் சொன்னதால் எங்களுக்கு 3 மாதம் சிறைத் தண்டனை.

அமைச்சர்களின் துணைவியாரும், டி. டி. கே. யின் மருமகளாரும் 2 மணி நேரம் நாங்கள் கூறியதையே கூறினார்கள்.

"பணக்காரர்களை ஒழிக்கப் பயப்படுகிறீர்கள். அக்ரமத்தை அழிக்கத் துணிவு இல்லை" என்ற வகையிலே டி. டி. கே. பேசினார்.

எதற்காக அத்தனை? டி. டி. கே.யும், பக்தவத்சலம் மனைவியார் கூறுவது ஒருபுறமிருந்தாலும் உங்கள் வீட்டு அரிசிப் பானை பேசிக்கொள்ளாதா? "எனக்குப் பேச வாயில்லை! உனக்குக் கண்ணிருந்தால் என்னைப் பார்"-என்று சொல்லும்.

நாங்கள் விலைவாசி ஏறிவிட்டது என்று சொன்னது என்ன கற்பனையா? இப்போது அறிக்கை தயாரிக்கிறார்களே!

நியாய விலைக் கடைகளைத் திறக்கப்போகிறோம் என்றால் என்ன அர்த்தம்?

இவர்கள் நியாய விலைக் கடைகளைத் திறக்கிறார்கள் என்றால் மற்ற கடைக்காரர்கள் அநியாயவிலையில் பொருள்களை விற்கிறார்களா? அந்த அநியாய விலையில் பொருள்களை விற்பவர்களைக் கண்டிக்க அரசாங்கத்திற்குத் தகுதியில்லை. அவர்களுடைய தயவு இவர்களுக்குத் தேவை.

விலைவாசி உயராமலிருக்க கள்ளமார்க்கெட்டில்கொள்ளை லாபம் சம்பாதிப்பவர்களையும் சில மொத்த வியாபாரிகளின் அக்கறையற்ற தன்மையையும் சி. ஐ. டி. களை வைத்து கண்டுபிடித்துத் தண்டிக்கச் சட்டம் கொண்டு வரவேண்டும்.

இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், இந்த ஆட்சியினர் சிந்தித்துப் பார்ப்பதற்காக!

எங்களது செயல் நியாயமானதுதான் என்பதற்காக.

நாங்கள் வெளியிலே வீராப்புப் பேசவில்லை. தாங்க முடியாத விலைவாசி உயர்வினை அனைவரும் உணர்ந்திருக்கிறார்கள். வருமானத்தைவிடச்செலவினம் அதிகமாக இருப்பதை ஒவ்வொரு குடும்பமும் உணர்ந்துள்ளது. அடுக்களைப் பானை கூட இதைக் கூறும்.

சர்வ கட்சித் தலைவர்களையும் அழைத்து பொருளாதார நிபுணர் குழு ஏற்படுத்தி, விலைவாசி உயர்வுக்குப் பிரச்னைக்கு வழி காணுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டோம்.

(10-ம் பக்கம் பார்க்க)

காட்டிக் கொடுப்பவர் வாழுவதோ? நாட்டு மக்களென்ன ஊமைகளோ?

'சூ'வை விரட்ட வா!

காட்டிக் கொடுக்க லாமோ—நாட்டைக்
காட்டிக் கொடுக்க லாமோ—மாலை
சூட்டி அழைக்க லாமோ—பகைவனைச்
சூழ்ந்து பிழைக்க லாமோ—தோழா (காட்டிக்)

வீட்டைக் கெடுக்க லாமோ—உள்ளே
வேட்டை தொடுக்க லாமோ—இங்கே
தேட்டை அடிக்க லாமோ—சரியெனச்
சேட்டை பிடிக்க லாமோ—தோழா (காட்டிக்)

நாடித் திரிய லாமோ—பிறனை
நத்தி அலைய லாமோ—அடிமை
தேடிக் கொடுக்க லாமோ—நாட்டைச்
சீனர் பிடிக்க லாமோ—தோழா (காட்டிக்)

கூடி விளக்க லாமே—நமக்குள்
கொள்கை முழக்க லாமே—மக்களைத்
தேடிக் கொடுக்க லாமே—அதனைச்
சேர்ந்து முடிக்க லாமே—தோழா (காட்டிக்)

தாயைப் பிழைக்க லாமோ—எவர்க்கோ
தாழ்ந்து பிழைக்க லாமோ—இழிந்த
நாயை நிகர்க்க லாமோ—ஈன்ற
நன்றி மறக்க லாமோ—தோழா (காட்டிக்)

காலைப் பிடிக்க லாமோ—பகைவற்கு
வாலைக் குழைக்க லாமோ—கையில்
வேலைக் கொடுக்க லாமோ—நமது
வேலை கெடுக்க லாமோ—தோழா (காட்டிக்)

பற்றி எரியும் போது—மூட்டிய
பாவிக் கிரங்க லாமோ—பகையைச்
சுற்றி நொறுக்க வா வா—சீனச்
'சூ'வை விரட்ட வா வா—தோழா (காட்டிக்)

— கவிஞர் முடியரசன் —

அண்ணாதுரை பிரதமர் நேருவைச் சந்திக்க 'ரகசிய' ஏற்பாடு நடைபெறுவதாக தி. மு. க. வினர் பேசிவந்தனர். ஆனால் இன்றுவரை நேருவைச் சந்திக்கவில்லை; நேரு அழைக்கவும் இல்லை. ஆனால் தடபுடல் தர்பார் எதுவுமில்லாது தோழர் எஸ். ஏ. டாங்கே நேருவைச் சந்தித்து உரையாடினர்.

(இது 'ஜனசக்தி' என்ற பத்திரிகையில் வெளிவந்த கேலிச் சித்திரம்)

புளுகுணி ஜனசக்தியே அண்ணாஅவர்கள் நேருவைச் சந்திக்க எந்தஏற்பாடும் நடைபெறவில்லை. இப்பொழுது சந்தித்துப் பேச வேண்டிய அவசியமும் எங்களுக்கில்லை.

ஆனால் உனக்கும்; உன் கும்பல்களுக்கும் இப்பொழுது நேருவைச் சந்தித்து, மடிப்பிச்சை கேட்டால் தான் இந்தியத் துணைக் கண்டத்தில் வாழ்வு.

நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகள் யார் என்பதை மக்களும்—அரசினரும் தெளிவாகப் புரிந்து கொண்டு விட்டார்கள்.

டெல்லியிலே மக்கள் கொடுத்த உதைக்குப் பிறகு தான்—இந்த நிலைமை தொடர்ந்துவிடக் கூடாதே எனத் தொடை நடுங்கிப்போய், நேருவைச் சந்தித்து, "பாபுஜீ அவர்களே உங்கள் திருவாயால் எங்களை நல்ல பிள்ளைகள் என்று சொல்லுங்கள். இல்லையேல் நாட்டு மக்கள் எலும்பை எண்ணி விடுவார்கள் போலிருக்கிறது. எங்கள் உயிரைக் காப்பாற்றுங்கள்" என்று அபயம் கேட்டுத்தானே வெளிவருகிறார் டாங்கே!

இல்லையென்றால் அவசரமாக நேருவை டாங்கே சந்திக்க வேண்டிய அண்டர் கிரவுண்ட் ரகசியம் என்ன?

சொல்லு, கேலிச்சித்திரம் போட்டு; தானே சிரித்து மகிழும் கீழ்ப்பாக்கத்து ஜனசக்தியே சொல்லு!

அடிமைச் சுகம்

இந்தியக் கம்யூனிஸ்டுகள் வெளியே இருந்தால் நாட்டுக்கு ஆபத்தை உண்டாக்கக்கூடிய சதி வேலையில் ஈடுபடுவார்கள் என்று அவர்களை முன்னெச்சரிக்கையுடன் கைது செய்திருப்பதாக அரசு அறிவிக்கிறது.

உண்மைதான்! அவர்களுக்கு மானம் பெரிதல்ல! சோறுதான் முக்கியம்! பிறந்த மண்ணை அந்நியனுக்குக் காட்டிக்கொடுத்து அந்த அடிமைத்தனத்தில் கிடைக்கும் ஈனப் பதவியில் சுகம்காணும் பிறவிகள்தான் இந்தியக் கம்யூனிஸ்டுகள் என்பதைநமது ஓவியர் இப்படிச் சித்தரித்துக் காட்டியுள்ளார்.

அடுத்த இதழில்...

"அப்பா" எழுதும் தொடர் கட்டுரை.

"கம்யூனிஸ்டுகள் பற்றி" கூடலரசன் எழுதுகிறார்.

தோழன் — அலைகடல் அடியார் ஆகியோர் தரும் அரசியல் விமர்சனக் கட்டுரை.

புலவர் பொன்னிவளவன் எழுதும் புரட்சிக் கவிதை.

உங்கள் வினாவிற்கு விடை தருகிறார் வணங்காமுடி.

கேள்வி அனுப்ப வேண்டியமுகவரி கேள்வி—பதில் பகுதி "தென்னகத் தலைவன்" சென்னை-6.

பஞ்சசீலத்தை ஒப்புக்கொண்டவர் பாதகம் செய்யலாமா? வஞ்சகம் சூது வாயில் வைத்து வார்த்தை பேசலாமா?

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இதையே புறக்கணித்தனர். இதனுல் நாங்கள் அறப்போர் மறியல் செய்தோம்; நாங்கள் மட்டும் அல்ல நாட்டு மக்களும் அறப்போர் மறியல் செய்த னர்.

அதி தீவிர மதி படைத்த சிலர் கேட்டார்கள். ''கலெக்டர் ஆபீசிலும், தாசில்தார் ஆபீசிலும் என்ன அரிசியா இருக்கிறது? அங்கே மறியல் செய்கிருர்களே!'' என்று.

நாங்கள் என்ன அங்கே அரிசி மூட்டை இருக்கிறது என்ரு மறியல் செய்தோம். ஒன்று சொல்லுகிற அறிவு வேண்டும்; தெளிவு வேண்டும். அது இல்லாவிட்டால் கேட்டாவது தெரிந்துகொள்ளவேண்டும். இரண்டுமே இவர்களுக்கு இல்லை.

நாங்கள் சொல்லுவதை ஒரு காதால் வாங்கி, மறு காது வழியாக விட்டுவிடுகிருர்கள். கம்ப இராமாயணத்திலே, இராமன் மீது அம்பு எய்த போது அந்த அம்பு, அவன் மார்பிலே பாய்ந்து முதுகு வழியாக வெளியே சென்றதாகக் கம்பர் கூறுகிருர்.

நாங்கள் சொன்னது நல்லவர்கள் செவியிலே புகுந்தது.

இவர்களைப் புல்லர்கள் எனச் சொல்ல வேண்டாம். ஒரு காதிலே வாங்கி மறு காது வழியாக விட்டுவிட்டார்கள்.

இவர்கள் கழகத்தை இழித்துப் பழித்துப் பேசுவதன் மூலமோ, தரக் குறைவாகப் பேசுவதன் மூலமோ மக்கள் கருத்தைத் திசை திருப்ப முடியாது.

இந்தியாவை சீன ஆக்கிரமித்திருக்கிறது. இந்தியா காப்பாற்றப் பட்டால்தான் நமது இனம், மொழியைக் காப்பாற்ற முடியும்.

சீன ஏகாதிபத்திய வெறி கொண்டு போர் புரிகிறது. ஏகாதிபத்தியத்தை முறியடிக்க நமது முழு ஒத்துழைப்பையும் தருவதாகச் சொன்னேம்.

ஆக்கிரமிப்பை அழிக்க, ஏகாதிபத்தியத்தை ஒழிக்க முழு ஆதரவு தருவதாகச் சொன்னேமே தவிர, சர்க்கார் செய்கிற தவறுகளுக்கெல்லாம் ஆதரவு தருவோம் என்றல்ல. இவர்களுடைய குற்றம் குறைகளுக்கு ஆதரவு தருகிறோம் என்று அர்த்தமில்லை.

விடுதலை உணர்வை மறந்து விட்டு, இதிலே ஈடுபடுவதாக அண்ணு சொன்னர். சீனவை விரட்ட தி. மு. கழகம் முழு ஆதரவையும் தருகிறது.

ஒரு கட்சி நம்மைச் சந்தர்ப்பவாதிகள் என்று சொல்லுகிறது. சந்தர்ப்பவாதிகள் யார் என்பது இப்போது நன்ருகப் புரியும். மாநாட்டிலே ஒரு கொள்கையும்; வெளியே மாறுபட்ட கருத்துமில்லை. ஆக்கிரமிப்பு நடத்தியபின் பரிசிலனை செய்யவில்லை. அன்றே நாம் தெளிவான முடிவுக்கு வந்து விட்டோம். ராஜ்ய சபையிலேயும், கடற்கரையிலேயும் அண்ணு, நேருவின் கரத்தை வலுப்படுத்துவோம் என்று கூறினர்.

வடகிழக்கு எல்லையிலே. 1956-ல் தங்களுக்குச் சொந்தமானது மூவாயிரம் மைல்கள் எனச் சீனபடம்போட்டுககாட்டியது. 1961-ல் தங்களுக்குச் சேர வேண்டியது என்று ஐயாயிரம் சதுர மைல்கள் என்று படம் போட்டது. அவர்களது ஆதிக்க வெறியை நிலைநாட்ட முயற்சிக்கிருர்கள்.

பாண்டுங் மாநாடு கூட்டப்பட்டபோது சூ-என்-லாயும், பண்டிதரும் 5 கருத்துக்களை எடுத்துச் சொல்லி, அவற்றைப் 'பஞ்சசீலம்' என்று சொல்லி—அதனுல் உலகத்திற்கு நன்மை எனவும் சொல்லித் தீர்மானம் நிறைவேற்றினர்கள். பஞ்சசீலக் கொள்கையை ஒப்புக்கொண்ட சீன இன்று துரோகம் புரிகிறது—நம்பிக்கைத் துரோகமாக நடக்கிறது.

எந்த நாட்டின்மீது ஆக்கிரமிப்பு நடைபெற்ருலும் அமெரிக்காவும், பிரிட்டனும் சும்மா இருக்காது. உலகத்திலே இருக்கிற ஜனநாயக முறையிலே ஆட்சி நடத்தும் எல்லா நாடுகளும் எதிர்ப்புத் தெரிவிக்கும்.

ஐக்கிய நாடுகள் சபை இந்த ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தப் படைகளை அனுப்பவேண்டும். காங்கோ பிரச்னையின் போது நமது படை வீரர்கள் அங்கு அனுப்பப்பட்டதுபோல் இதற்கும் படைகளை அனுப்பி, சீன ஆக்கிரமிப்பைத் தடுக்க வேண்டும்.

கம்யூனிஸ்ட் நண்பர் கல்யாணசுந்தரம் நான் பேசியதைக் கிண்டல் செய்து பேசியிருக்கிருர். ''ஐ. நா. படைகளைக் கொண்டுவர வேண்டும் என்று தி. மு. கழகத் தலைவர் ஒருவர் பேசியிருக்கிருர். நமது வலிமையிலே நம்பிக்கை இல்லாதவர்கள்''—என்று கூறியிருக்கிருர்.

''நீ வீரன? நான் வீரன? என்று பேசிக்கொள்கிற குஸ்தியா இது?'' ''நீ ஜெயிப்பாயா? நான் ஜெயிப்பேன?''—என்று பேசுகிற விளையாட்டா இது?

ரஷ்யப் போர்க் கருவிகளையும், பீரங்கிகளையும், டாங்கிகளையும் குவிக்கிறது சீன. ஆனுல், இந்தியா யாருடைய உதவியையும்பெருமல், தனது நாட்டின் எல்லைக்குள்ளேயே இருக்கிறது. இது வின்ட்டர் சீசனக இருப்பதால் அவர்களுக்குச்சாதகமாக இருப்பதாகச் செய்தி வருகிறது. (அங்கே சீனவுக்கு ரஷ்யப் படை குவிகிறது. இங்கே கம்யூனிஸ்ட் தலைவர் பேசுகிருர். ''நமது வலிமையில் நமக்கு நம்பிக்கை வேண்டும். மற்றவர்களின் உதவியைக் கேட்பது கேவலம்''—என்று.

இந்தியா வீழ்ந்தால் ஆசியக் கண்டத்தின் ஜனநாயக நாடுகள் அனைத்தும் வீழும். தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகிறது சீன.

ஜனநாயகம் காப்பாற்றப் படவேண்டுமானுல், அனைத்து நாடுகளும்—ஐ. நா. சபையும் நமக்குப் படை அனுப்பினுல் சீனவை எல்லைக் கோட்டிலிருந்து விரட்ட முடியும். அவர்களின் பகுதியைப் பிடிக்க அல்ல!

ஆண், பெண், மாணவர்கள், தொழிலாளர்கள் அனைவருக்கும் அரசினர் பயிற்சி அளிப்பார்கள் எனக் கருதுகிறேன்.

போரிலே ஈடுபட்டு காயம் அடைந்த நமது வீரர்களுக்கு ரத்தம் செலுத்தினுல்தான், அவர்கள் உறுதியோடு போர் புரிவார்கள். குருதிக் கொடை வழங்க நாம் தயாராக இருக்க வேண்டும். படைகளுக்கு ஆள் எடுக்கும் ஒவ்வொரு ஆபீசுகளுக்கும் சென்று பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

இறுதி வெற்றி நமக்கே! இறுதி வெற்றி ஜனநாயகத்திற்கே என்ற உறுதி உண்டு.

ஜனநாயகம் என்றும் வீழ்ந்ததில்லை. சர்வாதிகாரம் வீழத்தான் செய்யும்.

நாம் சாதாரணமாக இல்லாது, போர்ப் படைக்கு ஆள் சேர்க்கவும், நிதி, நன்கொடைகள் வழங்கவும், குருதிக் கொடை தரவும் நாம் தயாராக இருக்கவேண்டும்.

செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் கெடுதல். என்ருர் வள்ளுவர்.

நமது வீரம் மறைந்து கிடக்கிறது. மறைந்த நமது வீரத்தை நிலைநாட்ட—''நான் அடிமையாக மாட்டேன் என எழுச்சி கொண்டு, ஜனநாயகத்தை வாழவைக்க நாம் பாடுபடவேண்டும். நடமாட முடியாதவர்கள்கூட வீரம்பெறும சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காட்டிக்கொடுத்த கதை

கம்யூனிஸ்டுகள் விஷயத்தில், இரண்டு விஷயங்களை ஒவ்வொரு நிமிஷமும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். (1) கம்யூனிஸ்டல்லாத நாட்டில் வாழும் கம்யூனிஸ்டுகள், அந்த நாட்டின் மீது மற்ருெரு கம்யூனிஸ்ட் நாடு பாத்யதை கொண்டாடினுல், தாய் நாட்டைக் காட்டிக் கொடுக்கத் தயங்க மாட்டார்கள்.

உதாரணம்: சீனக் கம்யூனிஸ்டுகளே 1929—ல் தம் நாட்டை சோவியத் ரஷ்யாவுக்குக் கொடுத்தது. (2) கம்யூனிஸ்டுகள் அதிகாரம் வகிக்கும் நாடுகள் ஆட்சிபலஹீனப்பட்டு, மக்கள் எழுச்சி உரம் பெற்ருல், மக்கள்ன் எழுச்சியை அடக்குவதற்கு மற்ருெரு கம்யூனிஸ்ட் நாட்டின் உதவியை நாடத் தயங்க மாட்டார்கள். இதற்கு உதாரணம்: 1956—ல் ஹங்கேரியில் ஏற்பட்ட மக்களின் எழுச்சியை அடக்குவதற்கு சோவியத் ரஷ்யாவின் உதவி கோரப்பட்டது.

—தினமணி

இந்தியாவின் எந்தப் பொறுப்புள்ள அதிகாரியும் கம்யூனிஸ்டுகளை நம்பாதீர்

எதிரிக்குத்தேவையான செய்திகள் கிடைக்கக் கூடிய அமைப்புகளில் நுழைய அவர்களை அழைக்கக்கூடாது மட்டுமல்ல; யாரும் உப்யூனிஸ்டுகளை நம்பலாகாது. நம்பக் கூடாது. தங்களது துரோகத்தைக் கம்யூனிஸ்டுகள் தாங்களே வெடட வெளிச்சமாக்கிக் கெசண்டிருக்கிருர்கள். இந்தியாவின் எந்தப் பொறுப்புள்ள அதிகாரிகளும் அவர்களை நாட்டின் நம்பிக்கைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது. அப்படி யாராவது செய்வார்களேயானுல் அது நாட்டுக்கும் அரசாங்கத்துக்கும் ஆபத்தை உண்டு பண்ணுவதாக இருக்கும்.

—'இந்தியன் எக்ஸ்பிரஸ்.

மதுரையிலே பொற்செழியன் பிணமாக விழுந்தான். இன்னும் கோவை — மதுரை திருச்சி சிறைகளிலே கழகத் தோழர்கள் கையிலே கலயம் ஏந்தி இரும்புக் கம்பிகளுக்குப் பின்னல் இருந்தார்கள்.

காரணம் சொந்த புத்தி தான் இல்லாவிட்டாலும், சொற்பபுத்தியும்இல்லாதச்சர்க்காரைப் பெற்றிருக்கிறோம்.

தி. மு. கழகப் போரினல் ஜனநாயகத்திற்கு ஆபத்து என்பதை நன்ருக உணர்ந்திருக்கிறது. நண்பர் தென்னவன் சேக்ஸ்பியர் நாடகத்திலிருந்து ஒன்றை உதாரணம் கூறினர். சீசரை புரூட்டஸ் கொல்ல வரும்போது. சீசர் புரூட்டசைப் பார்த்து ''மிக நெருங்கிய நண்பனுன ஏய், புரூட்டஸ் நீயுமா ?'' என்று கேட்டான். புரூட்டசின் நிலையிலேதான் சீன நம்மீது படையெடுத்திருக்கிறது.

இன்று சீனஇந்தியத் துணைக் கண்டத்தின் வடபிராந்தியத்திலே ஆக்கிரமித்திருப்பது துரோகத்தனம் - ஈனத்தனம். பேராசை கொண்டு, ஏகாதிபத்திய வெறிபிடித்து இப்போது ஆக்கிரமிப்பு நடத்தியிருக்கிறது.

''இந்தப் பயங்கரப் போர் ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் நடக்கும்போர்'' என்று நமது அருமைத் தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் சொன்ன அந்தப் பேருண்மையை நாம் சிந்தித்தாக வேண்டும்.

சீன இரத்த வெறிகொண்டு அலைகிறது. அங்குள்ள இளைஞர்களுக்கு இளமையிலேயே இராணுவத்தில் சேர்த்து துப்பாக்கி கொடுத்து பயிற்சி கொடுக்கிறர்கள்.

இன்றைய தினம் சீன, இந்திய நாட்டின் ஜனநாயக முறையை-கலை உணர்வை-கீர்த்தியை-புகழை-மொழியை அவமதித்து. நாட்டை நாசம் செய்யும் விளையாட்டிலே ஈடுபட்டிருக்கிறது.

இந்திய அரசாங்கத்திற்கு தி. மு. கழகத்தின் உதவி எப்போதும் தயார், ஆனல் பீகிங் தாசர்கள், மாஸ்கோ பித்தர்கள் மக்களைத் திசை திருப்பும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறர்கள்.

அந்நியன் உ. பி. யில் நுழைந்தாலும்—காவிரிக் கரையில் நுழைந்தாலும் —விந்திய மலைக்கு வந்தாலும்—கேரளத்தில் நுழைந்தாலும், நல்ல கொள்கை படைத்த நாங்கள் அந்நியரை விரட்டும்—அவர்களைப் படுசூரணமாக்கும் பயங்கரப்போரில் ஈடுபடக் காத்திருக்கிறோம்.

தி. மு. கழகம் நேருவின் கரத்தை வலுப்படுத்தும் என அண்ணு உறுதி அளித்துவிட்டார். எங்களுடைய முழு ஒத்துழைப்பையும் தருவதாகக் கூறினர். புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எழுபத்தையாயிரம் ரூபாய்களை முதன் முதலாக அளித்தார். தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்களும், எங்களால் இயன்ற சிறு உதவியாக ஒரு மாதச் சம்பளத்தைக் கொடுத்தோம்.

மாணவர்களும், ஏழை, எளியவர்களும், சாதாரண மக்களும் நகை நட்டுக்களை வழங்குவதை நீங்கள் பார்க்கிறீர்கள்.

ஏழைகள், மாணவர்கள், தொழிலாளர்கள் நாட்டைக் காக்க ஆர்வம்காட்டுகிறர்கள் இந்த ஆர்வம் ராஜாக்களுக்கும், மில் முதலாளிகளுக்கும் ஏற்படவில்லை.

நாட்டைச் சூழ்ந்திருக்கித ஆபத்து பேராபத்து என்பயை தொழிலாளர் வர்க்கம் அறியும்!

மில் முதலாளிகளிடமும்—பெரியவர்த்தகம் நடத்துபவர்களிடமும் போய் இவர்கள் நிதி வசூலிக்கவேண்டும்.

மலெயாவிலே போர் நடந்தபோது சுபாஷ்சந்திரபோஸ் பெரிய பணக்காரர்களிடம் சேன்று நிதி கேட்டார். அப்போது அவர் அவர்களிடம் சொன்னர். ''நீங்கள் ஐந்து பிரசண்ட், பத்து பிரசண்டு தருவதாகக் கூறுகிறீர்கள். ஆனல் நாட்டைக்காக்கப் போரிடுகிற வீரர்கள் எங்கள் உயிரில் 5 சதவிகித உயிரைத் தருகிறோம்; 10 சதவிகித உயிரைத் தருகிறோம் என்றுசொல்லுகிறர்கள்? போரடுகிற வீரன் ஒருவனின் உயிருக்கு நீங்கள் கொடுக்கிற 1 கோடி பணமும் ஈடாகாது'' என்ருர்.

மில் முதலாளிகளிடமிருந்தும், பதுக்கல்காரர்களிடமிருந்தும் பணம் திரட்ட யுத்தக் கமிட்டி முயலவேண்டும்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வராசன், சீர்காழியைச் சேர்ந்த வகாப், இன்னும் இராசப்பன், முத்து கருப்பன் ஆகிய தமிழ் வீரர்கள் சீனர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகி அவர்களின் பிணம் புதைக்கப் படாமல்கூட பனியிலே தூக்கி யெறியப்பட்டிருக்கிறது. தமிழ் வீரர்களின் பிணம் இமயமலைச் சாரலிலே கிடக்கிறது. ஒரு கோடி ரூபாய் செலவழித்தாலும், அவர்களின் உயிரைப் பெறமுடியாது.

சீன சுட்டு வீழ்த்துகிற ஒவ்வொரு வீரர்களுடைய இரத்தத்திலிருந்தும், சீனவின்பயங்கர எதிரிகள் தோன்றுவார்கள். ஒவ்வொரு துளி இரத்தத்திலிருந்தும் ஒவ்வொரு வீரர்கள் உதயமாவார்கள்.

சர்வாதிகாரத்தை முறியடிக்க—ஜனநாயகம் வெற்றி பெற, ஜனநாயக உலகத்தைச் சிருஷ்டிக்க தி. மு. கழகம் என்றும் பின் [illegible]

அண்ணன் கேட்கிருர் அள்ளிக் கொடுப்போம்!

கழகக் கண்மணிகளே! தோழர்களே! டிசம்பர் 2–ந் தேதி சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டம்.

அறிஞர் அண்ணு பேசுகிருர்.

அந்தக் கூட்டத்தில் தேசியப் பாதுகாப்பு நிதிக்கு வழங்க, இதுவரை கழகம் சேர்த்திருக்கும் தொகை அறிஞர் அண்ணு அவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

மக்களுக்குத் துயர் வந்த பொழுது அதைத் துடைக்கக் கழகம் தயங்கியதில்லை.

கைத்தறியாளர்கள் அவதிப்படும் பொழுது, தோளிலே துணி சுமந்து விற்று ஒரே நாளில் ஒன்றரை லட்ச ரூபாய் சேர்த்துக் கொடுத்தோம்.

தமிழகத்து மக்கள் வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட பொழுது நாடகம் நடத்தி நிதி சேர்த்துக் கொடுத்து அவர்கள் கண்ணீரைத் துடைத்து, கவலை போக்கினேம்.

இன்று நரிக்குணம் படைத்தோரால் நாட்டுக்கே ஆபத்து வந்திருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்தை கம்யூனிஸ்ட் சீன வெறியரிடமிருந்து காப்பாற்ற தி. மு. கழகம் உறுதியெடுத்துக் கொண்டிருக்கிறதாகையால்—

தேசியப் பாதுகாப்பு நிதிக்கு பெருந்தொகை வழங்க கழகம் முடிவு செய்துள்ளது.

டிசம்பர் 2-ந் தேதிக் கூட்டத்தில் கழகக் காவலர் யாவரும் மடியேந்தி நிதி வசூலிக்க இருக்கின்றனர்.

ஐந்து ரூபாய்க்கும் அதிகமாகக் கொடுப்போர் அறிஞர் அண்ணு அவர்களிடம் நேரடியாகக் கொடுக்கலாம்.

இந்தக் கூட்டத்திற்கு வருவோர், அண்ணுவின் கருத்துரையைக் கேட்க வருவோராக மட்டும் இருக்கக் கூடாது. ஒவ்வொருவரும் குறைந்தது ஒரு ரூபாயாவது கொடுத்தாகவேண்டும்,

தேவையில்லாத செலவுகளை இந்தத் தூயபணிக்காக நிறுத்திவைத்து—நாடுகாக்க அதைத் தாருங்கள்.

இதோ என் தம்பிமார் தந்த தொகை......இவ்வளவு என்று அண்ணன் இதயங்குளிரக் கூறுவார்.

அது கேட்டு நாடு பெருமகிழ்வு கொள்ளும் !

ஏகாதிபத்தியப் பாம்பிடமிருந்து எல்லையைக் காக்க—

வெறிபிடித்த கம்யூனிஸ்ட் சீனர்களை விந்தியத்திற்கப்பாலே விரட்டியடிக்க—

நரிக்குணம்படைத்தோரிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற—

நாம் கொடுக்கும் ஒவ்வொரு காசும் பயன்படும்.

அந்த நல்ல செயலுக்கே நமது அண்ணன் கேட்கிருர் நிதி.

அள்ளிக் கொடுக்க அணி திரண்டு வாரீர் ! வாரீர் !

"கனம் அமைச்சர் கோபால் ரெட்டி அவர்கள் 'போர் ஆதரவு விளம்பரத்திற்கு பத்திரிகைகள் இலவச இடம் ஒதுக்கித் தர வேண்டும்' என்று கேட்டுக் கொண்டுள்ளார்."

"என் கட்சியினர் நடத்தும் நாளிதழ்கள், கிழமை இதழ்களில் அமைச்சர் கேட்டுக் கொண்டபடி இலவச இடம் ஒதுக்கிவிட ஏற்பாடு செய்கிறேன்."

மாநில அவையில்
அறிஞர் அண்ணா

அறிஞர் அண்ணா அவர்களின் மாநில அவைப் பேச்சுக்கு மரியாதை செலுத்தும் வகையில், "தென்னகத் தலைவன்" கடைசிப் பக்கத்தில் போர் சம்பந்தமாக அரசினர் தரும் விளம்பரங்களை இலவசமாக வெளியிட மகிழ்ச்சியுடன் காத்திருக்கிறோம்.

இந்தச் செய்தி திரு. கோபால் ரெட்டி அவர்களுக்கும் அஞ்சல்மூலம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எல்லையில் போராடும் வீரர்களுக்கு
குருதி கொடுப்போம்;

தேசியப் பாதுகாப்பு நிதிக்கு
வாரி வழங்குவோம்!

பாம்பு தின்னிகள்
படையெடுப்பதோ?

பாண்டியன் பரம்பரை
பார்த்து நிற்பதோ?

வெள்ளிப் பனிமலையை
விட்டுக் கொடுத்தொரு
எல்லைச் சமரசம் இல்லை

…சிரியர், வெளியிடுபவர்: ஜி. தினகரன், 31, பார்த்தசாரதிப்பேட்டைத் தெரு, சென்னை-6.
அச்சிடுபவர்: எஸ். சொக்கலிங்கம், பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை 17.